Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily

மலர் 7 (20-10-65) இதழ் 250

விசுவாவசு ஐப்பசி 4 ஜ: ஆகிர் பிறை 24 புதன்கிழமை

தரத்திலும்
மணத்திலும்
சிறந்தது
காமதேனு
கோப்பியே

தயாரிப்பாளர்:
பரீதா ஸ்ரோர்ஸ்
29, பழைய சோனகத் தெரு,
கொழும்பு - 12 போன்: 5830

## குறைந்த சம்பளம் வேண்டும்!

யாழ்ப்பாணம், செவ்.

பதினேழு விலைக்கட்டுப்பாட்டு பரிசோதகர்கள் பதவிக்கு அண்மையில் அரசாங்கத்தினால் மனுக்கள் கோரப்பட்டன. இந்தப்பதவிக்கு அரசாங்க சேவையிலுள்ளவர்களும் மனுப்பண்ணலாம் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. எதிர்பார்த்ததற்கும் மேலாக 3000 அரசாங்க ஊழியர்கள் மனுச் செய்திருந்தார்கள்.

உணவுக் கட்டுப்பாட்டு பரிசோதகர்களுக்கு வழங்கப்படும் சம்பளத்திலும்

(6 ம் பக்கம் பார்க்க)

# 'இப்போது அணுகுண்டு தயாரிக்க மாட்டோம்

## சீன - இந்திய உறவுக்கு யாரும் முயற்சிக்கவில்லை'

— இந்திய பிரதமர்

## டில்லியில் கலப்பு அரசாங்கம் தேவையில்லை என்கிறார் சாஸ்திரி

அவுரங்காபாத், அக். 19

அணுகுண்டு தயாரிப்பதில்லை என்ற இந்தியாவின் கொள்கையை பிரதமர் சாஸ்திரி மீண்டும் இங்கு வலியுறுத்தினார். "தற்போது இதுதான் நமது கொள்கை" என அவர் கூறியதற்கு, "இதுதான் நிரந்தரக் கொள்கையா" என நிருபர்கள் வினவினர். அதற்கு சாஸ்திரி "இக் கேள்வியைப் பிறகு கேட்கலாம்" என்றார்.

பாகிஸ்தானில் இந்தியத் தூதராலயம் தாக்கப்பட்டதற்கு நஷ்டஈடு கிடைக்குமா எனக் கேட்கப்பட்டது.

''பாகிஸ்தான் நஷ்டஈடு தரும்என நம்புவோம். இல்லாவிட்டால் வேறு நடவடிக்கை எடுத்துக்கொள்வோம். அது என்ன நடவடிக்கை என்பதை இப்போது சொல்லவிரும்பவில்லை'' என்றார் சாஸ்திரி.

திரு. சாஸ்திரி மகாராஷ்டிரத்தில் இருதினங்கள் சுற்றுப் பிரயாணம் செய்துவிட்டு டில்லி புறப்படுமுன் அவுரங்கபாத்தில் நிருபர்களுக்குப் பேட்டியளித்தார்.

### சீன உறவு

இந்தியாவுடன் உறவை நிலைநாட்டுவதற்கான முயற்சி எதையும் சீனா செய்யவில்லை என அவர் கூறினார். சமீபத்தில் டாக்டர் ராதாகிருஷ்ணன் ருமேனியாவுக்கு விஜயம் செய்திருந்தபோது சீன - இந்திய நாடுகளுக்கிடையே மத்தியஸ்தம் செய்து வைக்க அந்த நாடு முன் வந்தது எனக் கூறப்பட்ட செய்தி குறித்து அவர் பதிலளித்தார். மத்தியஸ்தம் செய்வதாக கூறப்படவும் இல்லை: ஏற்கப்படவும் இல்லை'' என சாஸ்திரி கூறினார்.

தாம் அமெரிக்காவுக்குச் செல்ல விரும்புவதாயும், ஆனால் எப்போது என்பதை இப்போதே கூற முடியாது என்றும் அவர் மேலும் கூறினார்.

### கலப்பு அரசாங்கம் இல்லை

டில்லியில் கலப்பு அரசாங்கம் ஏற்படுத்தப்படுமா எனக் கேட்கப்பட்டதற்கு இத்தகைய யோசனை எதிர்க்கட்சிகளிடமிருந்து கூட கிடைக்கவில்லை என்றும் அரசாங்கத்தின் நெருக்கடிகால நடவடிக்கைக்கு எதிர்க்கட்சிகள் முழு ஆதரவு அளித்து வருவதையும் திரு. சாஸ்திரி சுட்டிக் காட்டினார்.

## "சீனா தாக்கினால் அணுகுண்டு அடி"

பம்பாய், அக். 19

கம்யூனிஸ்ட்சீனா தொடர்ந்து இந்தியாமீது ஆக்கிரமிப்பு செயல்களில் இறங்கினால் அணுகுண்டுவீச அமெரிக்கா தயங்காதென்ற அபிப்பிராயம் அந்நாட்டில் நிலவுகிறதெனத் தோன்றுவதாக திரு. ஜி. டி. பிர்லா இங்கு கூறினார்.

## ஆசிய அபிவிருத்தி வங்கி

பாங்கொக், அக். 19

100 கோடி டாலர் செலவில் ஆசிய அபிவிருத்தி வங்கியை நிறுவுவது சம்பந்தமாகவருகிறவியாழக்கிழமை பாங்கொக்கில் பல நாடுகளைக்கொண்ட ஆயத்தக்கூட்டம் நடைபெறவிருக்கிறது.

## ஜோன்ஸன் இளைத்திருக்கிறார்

வாஷிங்டன், அக். 19

சத்திரசிகிச்சை செய்யப்பட்ட ஜனாதிபதி ஜோன்ஸனின் உடல்நிலை முன்னேற்றங்கண்டுவரும் அதேவேளையில், அவர் சற்று இளைத்திருப்பதாய் ஆஸ்பத்திரி அதிகாரிகள் கூறினர். அவருக்கு இப்போது சிறிது வலி இருப்பதாகக் கூறப்பட்டது.

## சிங்கள ஆசிரியர் நியமனம்

பம்பலப்பிட்டி, செவ்.

மொழிப்பிரச்னைக்குத் தீர்வு காணப்படும்வரை வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்குச் சிங்கள ஆசிரியர்களை அனுப்ப வேண்டாமென்று கல்வி இலாகாவுக்கு உத்தரவிடுமாறு தமிழரசுக்கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் பிரதமருக்குக் கடிதம் எழுதியிருப்பதாக இடதுசாரிப் பத்திரிகையான ஜனதின ஒரு செய்தி வெளியிட்டுள்ளது.

## திருமணம்

### வைத்தியநாதசர்மா — நாகரத்தினம்பாள்

அன்புடையீர்,

நிகழும் விசுவாவசு ஸு ஐப்பசி மீ 4-ம் திகதி (20-10-65) புதன்கிழமை பகல் 10 மணியளவில் கரணவாயூர் திருநிறை செல்வன் பிரம்ம ஸ்ரீ சங்கரசபாபதிக் குருக்களின் கனிஷ்ட புத்திரன் வைத்தியநாத சர்மாவுக்கும் (அஞ்சலக உதவித் தலைவர், வவுனியா), எமது ஏகபுத்திரி திருநிறை செல்வி நாகரத்தினம்பாளுக்கும், நயினை ஸ்ரீநாகபூஷணியம்பாள் சந்நிதியில் நடைபெறவிருக்கும் திருமண வைபத்தைக் குறித்து எமது இல்லத்தில் 23-10-65 சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நடைபெறும் கொண்டாட்டத்தில் அன்பர்கள் அனைவரையும் பங்குபற்றும்படி தயவாகக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

இங்ஙனம்
ச. வைத்தீஸ்வரஐயரும்
(சங்கீத ஆசிரியர், உடுப்பிட்டி மகளிர்கல்லூரி)
பாரியாரும்.

கல்வியங்காடு,
யாழ்ப்பாணம்,
19-10-65.

## டில்லி அமெரிக்க தூதராலயம் முன் ஆர்ப்பாட்டம்

### ஜனசங்க ஊழியர் நடத்தினர்

புதுடில்லி, அக். 19

இந்தோ பாகிஸ்தான் யுத்தத்தின்போது அமெரிக்கா கடைப்பிடித்த நிலையை எதிர்த்து இன்று டில்லியிலுள்ள அமெரிக்க தூதராலயம் முன் ஜனசங்க உறுப்பினர்கள் ஆர்ப்பாட்டம்செய்தார்கள்.

''கோதுமை உண்டோ இல்லையோ. காஷ்மீர்பற்றிசமரசம் கிடையாது'' என சுலோகங்களை அவர்கள் தாங்கி ஆர்ப்பரித்தார்கள்.

அமெரிக்க ஆயுதங்களை பாகிஸ்தான் உபயோகித்தால், இந்தியாவுடன் சேர்ந்து அதை எதிர்ப்பதாக ஜனாதிபதிகள் ஐஸன்ஹோவரும், கென்னடியும் அளித்த வாக்குறுதியை அமெரிக்கா நிறைவேற்றாதது குறித்து கண்டனம் தெரிவிக்கும் மகஜர் ஒன்றை தூதரிடம் அவர்கள் சமர்ப்பித்தார்கள்.

மீண்டும் அமெரிக்கா பாகிஸ்தானுக்கு ஆயுதம் வழங்கினால் அது பகைநடவடிக்கையாகக் கருதப்படும் என்று மகஜரில் கூறப்பட்டுள்ளது.

## "ஜவான்களுக்கு சபாஷ்" கூறி மாண்டார்

### சீக்கிய வீரரின் தீரப்போர்

புதுடில்லி, அக். 19

சீக்கிய பட்டாளத்தைச் சேர்ந்த லெப்டினன்ட் கேர்ணல் கன்னாவின் வீரசாகசம் பற்றிய செய்தி இப்போது கிடைத்திருக்கின்றது. மாவீரசக்கரம் பெற்ற இவர் கடந்த செப்டம்பர் 8ந் தேதி பூஞ்சில் எல்லைக் கோட்டுக்குஅப்பால் பாகிஸ்தான் காவல்நிலை ஒன்றைப் பிடிக்கத் தமது வீரர்களை இட்டுச்சென்றார். அப்போது பாகிஸ்தானியர் சரமாரியாக மோட்டார் பீரங்கிகள், யந்திரத்துப்பாக்கிகள் ஆகியவற்றால் தாக்கியதால் அவர் காயமடைந்தார். பின் இத்தாக்குதல் நிறுத்தப்பட்டது. ஆனால் மீண்டும் முன்னேறிச் செல்ல கன்னா தீர்மானித்தார். கையில் எறிகுண்டுகளுடன் பாகிஸ்தான் பீரங்கிகளுக்கு 20 யார் தூரத்தில் அவர் ஊர்ந்துசென்று விட்டதைக் கண்ட அவரது வீரர்கள் புதிய ஊக்கம்பெற்றுக் கூடவே முன்னேறினர். உடனே கன்னாவின் இடதுபுறத்தை ஒரு குண்டு தாக்கியது. தொடர்ந்து முன்னேறிய அவரது தோளில் மற்றோர் குண்டு விழுந்தது. அடுத்து யந்திரத் துப்பாக்கியால் சுடப்பட்டுக் காயமடைந்தார். உடனே அப்புறப்படுத்தப்பட்ட அவருக்கு குறிப்பிட்ட நிலையை இந்திய வீரர்கள் பிடித்துவிட்ட செய்தி தெரிவிக்கப்பட்டவுடன் ''ஜவான்களுக்கு எனது சபாஷ்'' எனக் கூறி மூர்ச்சித்து விழுந்து மரணமானார்.

## இளவரசர் சார்ள்ஸ் ஆஸி.யில் கற்பார்

லண்டன், அக். 18

பிரிட்டிஷ் பட்டத்துக்குரிய இளவரசர் சார்ள்ஸ் அடுத்த வருடம் முதல் ஆஸ்திரேலியாவிலுள்ள தலைசிறந்த கல்லூரி ஒன்றில் கல்வி கற்பார் என பக்கிங்ஹாம் அறிவிப்பு ஒன்று கூறியது.

## அயூப் அமெரிக்கா விஜயம்

நியூயோர்க், அக். 18

பாகிஸ்தான் அதிபர் அயூப்கான் வருகிற நவம்பர் அல்லது டிசம்பரில் அமெரிக்காவுக்கு விஜயம் செய்வாரென வெளிநாட்டு மந்திரி புட்டோ இங்கு அறிவித்தார்.

## இந்தோனேஷியா மறுப்பு

ஜாகர்த்தா, அக். 19

ஜாகர்த்தாவிலுள்ள சீன வர்த்தகத் தூதராலயத்தில் அத்துமீறிப் பிரவேசித்து தாக்குதல் நடத்தியதாக சீனா தெரிவித்த குற்றச்சாட்டை இந்தோனேஷியா மறுத்திருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

வெற்றியைவிட தோல்வியே மேலான ஆசிரியர். அறிவால் திகைப்பு ஏற்படும்போது அன்பு நம்பிக்கையளிக்கிறது. உலகின் நோய்களுக்கெல்லாம் அன்பே மகத்தான சஞ்சீவி, அன்பே வாழ்க்கையின் தர்மம், அன்பு தீங்கு எண்ணாது. தீமையைக் காணாது நல்லனவற்றையே காணும்.

— சுவாமி சிவானந்தா.


# ஈழநாடு

EELA NADU: National Tamil Daily Post Box 49, JAFFNA
Telegrams: EELA NADU Jaffna Phone: 389

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு ஐப்பசி மீ 4 உ (20 10 65)


## பாடசாலை மேற்பார்வைக் குழுக்கள்

"பெற்றோரையும் பாடசாலை வளர்ச்சியில் அக்கறையுடையவர்களையும் கொண்ட பாடசாலை மேற்பார்வைக் குழுக்கள் ஒவ்வொரு பகுதியிலும் ஏற்படுத்தப்பட வேண்டும்" என்று ஊர்காவற்றுறை எம். பி. ஒரு யோசனை தெரிவித்திருக்கிறார். பாடசாலைகளின் விருத்திக்கும் கல்வி வளர்ச்சிக்கும் இது நல்ல யோசனை.

தனிப்பட்ட முகாமையாளரின் நேரடி நிர்வாகத்தின் கீழ் பாடசாலைகள் இருந்தபொழுது அந்தந்தப் பகுதி பொதுமக்களின் விருப்பத்தை முகாமையாளர் அறிந்துகொள்ளக் கூடியதாகவும் அதற்கேற்ப பாடசாலைகளை அபிவிருத்தி செய்யக் கூடியதாகவுமிருந்தது. இப்பொழுது பாடசாலைகளின் நிர்வாகப் பொறுப்பு கல்விக்கந்தோரிடம் உள்ளது. பாடசாலைகளின் தேவைகள், அந்தந்தப் பகுதி மாணவர், பெற்றோரின் வசதிகள்பற்றி கல்விக்கந்தோர் அதிகாரிகள் கவலைகொள்ளவேண்டிய அவசியமில்லை. இதர அரசாங்க இலாகாக்களைப் போன்று பாடசாலைகளின் நிர்வாகப் பொறுப்பும் கல்விக்கந்தோர் அதிகார வர்க்கத்தினரிடம் தான் உள்ளது.

தனியார் பாடசாலைகளும் உதவிபெறும் பாடசாலைகளும் அரசாங்க உடைமையாக்கப்பட்ட போது பாடசாலைகளின் நிர்வாகம் பற்றி வித்தியாதிபதிக்கு ஆலோசனை கூறும் பொருட்டு மத்திய ஆலோசனைச் சபை ஒன்று நிறுவப்பட்டது. இச்சபையும் இப்பொழுது இயங்குவதாகத் தெரியவில்லை.

பொதுமக்களுக்கு குறிப்பாக பெற்றோருக்கு பாடசாலையில் நெருங்கிய தொடர்பிருந்தால்தான் பாடசாலைகளின் வளர்ச்சியிலும் கல்வி விருத்தியிலும் அவர்கள் அக்கறை செலுத்துவர். இதற்கு ஊர்காவற்றுறைப் பிரதிநிதி கூறுவதுபோல் ஒவ்வொரு பகுதியிலும் பெற்றோரையும் பாடசாலையின் வளர்ச்சியில் அக்கறையுடையவர்களையும் கொண்ட மேற்பார்வைக் குழுக்களை அல்லது ஆலோசனைச் சபைகளை ஏற்படுத்தலாம். பிரிட்டனிலும் காமன்வெல்த் நாடுகள் பலவற்றிலும் பிரதேச கல்வி ஆலோசனைச் சபைகளும் மத்திய ஆலோசனைச் சபையும் உள்ளன. இங்கும் இதே முறையைப் பின்பற்றுவதன்மூலம் மாணவரின் கல்வி வளர்ச்சியில் முன்னேற்றங் காணலாம். குறைகள் குறையக்கூடும்; பாடசாலைகளின் விருத்தி சம்பந்தமாக கல்விஇலாகா அதிகாரிகளுக்குள்ள சிரமமும் இதனால்குறையும்.

## வியட்னும் படுநாசம்

வியட்னமில் நடைபெறும் படுநாசங்களுக்கும், உயிர்ப்பலிக்கும் முற்றுப்புள்ளி வைப்பதற்கான அறிகுறி எதையும் காணோம். இதற்குச் சீக்கிரத்தில் முடிவுகாணாவிட்டால் வியட்னமுக்கு மட்டுமல்ல ஆசியாவுக்ும், அகில உலகுக்கும் ஆபத்து ஏற்படலாம். உலக அமைதியைப்பேணுவதற்காகவே ஸ்தாபிக்கப்பட்ட உலக மன்றமாகிய ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் இயங்கிக்கொண்டிருக்கையிலேயே வியட்னும் படுநாசம் தொடர்ந்து நிகழ்வதாயின் அதைவிட வேதனையும் வெட்கமும் தரக்கூடிய காரியம் வேறெதுவும் இருக்கமுடியாது.

வியட்நாமில் ஒரு லட்சத்து இருபத்தையாயிரத்துக்கும் அதிகமான அமெரிக்கத் துருப்புக்கள் இப்பொழுது வியட்னுமுக்கு வந்து போர்புரிகின்றனர். கம்யூனிஸ்ட் ஆக்கிரமிப்பிலிருந்து தங்கள் நாட்டைப் பாதுகாப்பதற்காகத் தென் வியட்னும் அரசாங்கம் கேட்டுக் கொண்டதற்கு இணங்கவே தாங்கள் துருப்புக்களை அங்கு அனுப்பி ஜனநாயகத்தையும் சுதந்திரத்தையும் காப்பாற்றுவதாக அமெரிக்கா சொல்லலாம். வியட்காங்கியர்மீது வீசப்படும் குண்டுகள் பொது மக்களைத் தவிர்த்துவைக்கிறதா?

வியட்னும் சம்பந்தமாக அமெரிக்கா கடைப்பிடிக்கும்கொள்கை, அதன் கூற்றுப்படிஅது நல்ல நோக்கத்தை உடையதாக இருந்தாலும்கூட வியட்னும் மக்களுக்கும், ஆசிய மக்களுக்கும் நன்மையானதல்ல. அமெரிக்காவுக்கும்கூட வீண் நஷ்டமும் அதிகம். உலகில் அதன் பெயருக்கும் புகழுக்கும்கூட இழுக்கேற்பட்டுள்ளது.

ஐ. நா. ஸ்தாபனம் வியட்னும் பிரச்னையில் இனியும் காலம் தாழ்த்தாது உடன் தலையிட்டு, வியட்னும் ஐ. நா.வில் அங்கம் வகிக்காதபோதிலும் அதையும் அழைத்துச் சமாதானத் தீர்வு ஒன்று காணவேண்டும். வியட்னுமில் உயிர்ப்பலியை நீடிக்கவிட்டால் ஐ.நா. ஸ்தாபனம் இருந்தும் ஒருபயனுமில்லை.

## 'நாட்டரிசி வேண்டும்'

வல்வெட்டித்துறை, செவ்.

கூப்பனுக்கு தொடர்ந்து பலவாரங்களாக பச்சையரிசி வழங்குவதால் குழந்தைகளுக்கு வயிற்றோட்ட நோய் ஏற்பட்டுள்ளதாகவும் இதைத்தவிர்த்து நாட்டரிசி வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் விவசாய உணவு மந்திரிக்கு பருத்தித்துறை எம். பி. திரு. துரைரத்தினம் தந்தியனுப்பியுள்ளார்.

# மட்டக்களப்பில் நடைபெற்ற இ. தி. மு. க. மகாநாடு

மட்டக்களப்பு, செவ்.

இலங்கை திராவிட முன்னேற்றக் கழக மூன்றாவது மாநிலமாநாடு மட்டக்களப்பு நகர மண்டபத்தில் நடைபெற்றது. கடந்த சனிக்கிழமை மாலை சமூக சீர்திருத்தமாநாடும், ஞாயிற்றுக்கிழமை காலை இலக்கிய மாநாடும், ஞாயிற்றுக்கிழமை மாலை அரசியல் மாநாடும் நடைபெற்றது.

முதலாம்நாள் சமூக சீர்திருத்த மாநாடு கந்தமுருகேசனர் அரங்கில் நடைபெற்றது. இவ்விழாவுக்கு திரு. க. கந்தசாமி தலைமை தாங்கினர்.

இ. தி. மு. கழகக் கொடியைப் பொதுச் செயலாளரான மு. அ. வேலழகன் ஏற்றி வைத்தார். எப். ஜீ. ஜெயசிங்கம் வரவேற்புரை நிகழ்த்த ஏ. இளஞ்செழியன் கந்தமுருகேசனர் படத்தைத் திறந்துவைத்தார்.

திருவாளர்கள் ஏ. பி. செல்லையா, ப. இசை நவராசன், வி. சனீஸ்வரன், குமாரசுவாமி, ச. முருகேசன், அ. முத்தழகு ஆகியோர் சமூக சீர்திருத்த மாநாட்டில் சொற்பொழிவாற்றினர். நாடகங்களும் நடைபெற்றன.

### இரண்டாம்நாள் நிகழ்ச்சிகள்

இரண்டாம்நாள் நிகழ்ச்சியானஇலக்கிய மாநாட்டுக்கு கவிஞர் காசி ஆனந்தன் தலைமைவகித்தார். புரட்சிக்கவிஞன் பாரதிதாசனின் படத்தை ஏ. இளஞ்செழியன் திறந்துவைத்தார்.

மட்டக்களப்பு எம். பி. திரு. சி. இராசதுரை தொடக்கவுரையில் குறிப்பிட்டதாவது:

பண்டிதர்களிடமும், பெரும் புலவர்களிடமும் மாத்திரமே இருந்ததமிழை பொதுமக்களிடம் கொண்டு வந்து சேர்ந்தது சுயமரியாதை இயக்கம். இந்த இயக்கத்தை ராமசாமிபெரியார் 40 ஆண்டுகளுக்கு முன்பு தமிழ்நாட்டில் தோற்றுவித்தார். அவ்வியக்கம் தான் பிற்காலத்தில் திராவிடக் கழகமாக உருவெடுத்து இப்போது திராவிட முன்னேற்றக்கழகமாக இயங்கி வருகிறது. தமிழ் இனிமையானது; இன்பம் நிறைந்தது, சுவைமிக்கது. என்பதை தமிழ்மக்களுக்குத் தெளிவாக எடுத்துக்காட்டியது அவ்வியக்கம். தமிழ்நாட்டில் ஏற்பட்ட இம்மாறுதல் இலங்கைவாழ் தமிழ்பேசும் மக்களையும் ஈர்த்தது. என்னைப்போன்றவர்களையெல்லாம் இந்த அளவுக்கு வளர்த்து உங்கள் முன் செந்தமிழை அழகாகப் பேச வைத்தது திராவிட இயக்கமே என்றால் அது பொய்யாகாது.

திருவாளர்கள் க. கந்தசாமி, இளஞ்செழியன் ஆகியோரும் கூட்டத்தில் உரை நிகழ்த்தினர்.

### மூன்றும் நாள் நிகழ்ச்சிகள்

மூன்றும்நாள் அரசியல் மகாநாடு வள்ளுவர் அரங்கில் மு. அ. வேலழகன் தலைமையில் நடைபெற்றது. "திராவிட மக்களின் வரலாறு" என்னும் புத்தகத்தை எழுதிய திரு. ஈ. எல். தம்பிமுத்துவுக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டது. திரு. வள்ளுவரின் உருவப் படத்தை செ. இராசதுரை திறந்துவைத்தார். இம்மகாநாட்டில் பலதீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. பலர் உரைநிகழ்த்தினர். கலைநிகழ்ச்சிகளும்கொழும்பு தேசியகலைப் பேரவையின் "நீதியின்நிழல்" என்னும் நாடகமும் தேனமுத இலக்கியமன்றத்தின் "மணமகனைத்தேடி" என்னும் நாடகமும் விழாவில் இடம்பெற்றது.

## சிறிமாவின் பேச்சுக்கு கண்டனம்

பம்பலப்பிட்டி, செவ்.

அரசாங்க கூட்டுத்தாபன ஊழியர்சங்க நிர்வாகக் கூட்டம் தலைவர் திரு. க. கனகரத்தினம் தலைமையில் நடைபெற்றபோது முன்னாள் பிரதமரும், தற்போதைய எதிர்க்கட்சித் தலைவருமான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா அண்மையில் மாத்தளையில் ஒரு கூட்டத்தில் "தமிழர்கள் இந்நாட்டிற்கு அடிமைகளாக வந்தனர்" எனப்பேசி இந்நாட்டு தமிழர்களை இழிவுபடுத்தியதை வன்மையாகக் கண்டித்ததோடு தமிழர் சங்கங்களையும், நிறுவனங்களையும் இதற்கு ஆட்சேபம் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளும் தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டது.

துறைமுக (சரக்கு) கூட்டுத்தாபனத்திலும், வாழைச்சேனை காகிதக் கூட்டுறவிலும்உள்ள தமிழ் ஊழியர்களுக்கு தீபாவளித் திருநாளுக்கு முன்பாகசம்பளத்தை வழங்குமாறு முகாமையாளரைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானமும் அண்மையில் மந்திரிசபை செய்த முடிவிற்கிணங்க நிறுத்தி வைக்கப்பட்ட கூட்டுறவுத்தாபன ஊழியர்களின் சம்பள உயர்வை வளங்குமாறு முகாமையாளரைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டன.

## குழாய்நீர் திட்டத்துக்கு பரிசோதனை

யாழ்ப்பாணம், புதன்

காரைநகர், தோப்புக்காடு கிராம முன்னேற்றச் சங்கம் உள்ளூராட்சி அமைச்சருக்கும் ஆணையாளருக்கும் குடிதண்ணீர்க் கஷ்டம் பற்றி தெரிவித்ததன்பேரில் கிழவனை என்னும் கேணியில் குழாய் நீர்த் திட்டம் அமைக்கும் நோக்குடன் குழாய் நீர்த் திட்ட உத்தியோகஸ்தர்கள் இக்கேணியில் பரிசோதனை நடத்தி வருகின்றனர். அத்துடன் மேற்படி கிராம முன்னேற்றச் சங்கத் தொண்டர்கள் சிரமதானமூலம் கேணியை துப்புரவாக்க உதவி செய்துள்ளனர்.

## வெளிநாடு சென்றார்

கிளிநொச்சி, செவ்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் கட்சியின் அமைப்புச் செயலாளருமான திரு. ஏ. சிவசுந்தரத்தின் புதல்வன் திரு. எஸ். கணேசலிங்கம் தொழில் நுட்பக் கல்வி பயிலும்பொருட்டு சென்றவியாழக்கிழமை விமானமூலமாக லண்டன் பயணமானார். திரு. எஸ். கணேசலிங்கம் அர்ச்.பரி. யோவான், யாழ். இந்துகல்லூரிகளின் பழைய மாணவராவார்.

## கம்யூனிஸ்ட் கட்சிமீது தடை

ஜாகர்த்தா, அக். 19

ஜாகர்த்தாவில் கம்யூனிஸ்ட் கட்சியும், மற்றும் 7 கம்யூனிஸ்ட் ஸ்தாபனங்களும் தற்காலிகமாக தடைசெய்யப்பட்டிருக்கின்றன.

ஜாவா, சுமத்ரா ஆகிய பகுதிகளிகல் இடதுசாரி ஸ்தாபனங்கள் பல தாக்கப்பட்டதாய் அறிவிக்கப்பட்டது.

கம்யூனிஸ்டுகளும், கம்யூனிஸ்ட் ஆதரவாளர்களும் கைது செய்யப்பட்டதாகவும், ஜாகர்த்தா ரேடியோ டைரக்டரும் கைதுசெய்யப்பட்டவர்களில் ஒருவரென்றும் அறிவிக்கப்பட்டது.

# ஐயாறன் எழுதுவது

இயற்கை அழகுக்குப் பேர்போனது இலங்கை. அத்துடன் செயற்கை அழகும் சேர்ந்தால் கேட்க வேண்டுமா? சந்நிதியை நெருங்க நெருங்க, தென்னந்தோப்புகளும், தொண்டமானாறும், இரும்புப்பாலமும், உயர்ந்த காற்றாடியும், நம் கண்களையும் மனதையும் ஈர்த்து சொல்ல முடியாத இன்பமளிக்கின்றன.

பஸ்ஸிலிருந்து இறங்கி கோவிலை நோக்கிச் சென்றேன். குப்பென்று ஒரே துர்நாற்றம். சகிக்க முடியவில்லை. ஆற்றோரம் வரிசையாக கக்கூஸ்கள் கட்டியிருக்கிறார்கள்! இவற்றைக் கோவிலுக்குச் செல்லும் வழியில் கட்டாமல், சற்றே ஒதுக்கிக் கட்டப்படாதா?

பலநாட்களாகக் கக்கூஸ்களில் வாளிகள் வைக்கவில்லையாம். இதனால் மக்களும் சிறப்பாகப் பெண்களும் படும் கஷ்டம் கொஞ்சமன்று. இதைப்பற்றி விசாரித்ததில், ஒரு வாளிக்கு மாதம் இரண்டரை ரூபாய் வீதம் 30 வாளிகளுக்கு கோவிலார்தான் 75 ரூபாய்க்கு மேல் உடுப்பிட்டி கிராம சபைக்குப் பணம் செலுத்துவதென்றும், சென்ற வருடம் கோவிலார் இப்பணத்தைச் செலுத்தாததால், கிராமசபையும் இந்தச் சேவையைநிறுத்திவிட்டதாயும் அதனால் அந்த ஊரே நாறும்படி ஏற்பட்டுவிட்டதாகவும் தெரிவித்தனர்.

யாத்திரிகர்மூலம் கோவிலுக்கு நல்ல வருமானமுண்டு. சென்ற வருடம் 26 ஆயிரத்துக்கு மேலும் கிடைத்ததாம். அப்படி இருக்க இவ்விதம் ஒருபுனித ஸ்தலத்தை அசுத்தமாக்குவது பெரிய பாவமும், யாத்திரிகர்களுக்குச் செய்யும் பெரிய தீங்குமாகும்.

இதில் கிராமசபையின் பொறுப்புத்தான் அதிகம். யாரோ பணம் கட்டவில்லை என்பதற்காக பொதுமக்களுக்குச் செய்ய வேண்டிய ஓர் அத்தியாவசிய சுகாதார சேவையைக் கைவிடுவது எவ்விதத்தும் தகாது. உடுப்பிட்டி எம். பி. இதை உடன் கவனித்து, இந்த ஸ்தலத்தின் புனிதத்தையும் யாத்திரிகர்களின் வசதியையும் பாதுகாக்க தக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

ஃ ஃ ஃ

அங்கு கோவில் கொண்ட முருகன் எவ்வளவு சக்தியுள்ளவரென்பதை அங்கு கூடும் பக்தர்கள் கூட்டத்திலிருந்தே தெரிந்து கொள்ளலாம். கடலுக்கு மிகப் பக்கத்திலிருந்தும் கோவில் குளத்துநீர் உப்பில்லாமல் குடிக்கக் கூடியதாகவுள்ளது. குழாய் வசதிகளுமுள்ளன. ஓர் அன்பர் கந்தபுராணம் படிக்க, பெரியவரொருவர் பயன் சொல்லிக் கொண்டிருந்தார். ஸ்கந்தசஷ்டிவரை இப்படிப்பு நடக்குமாம். படிக்கையில் கற்பூரம் எரிகிறது. ஆனால்இந்தக்கதையை சில தாய்மார்களைத் தவிர மற்றவர்கள்கவனித்ததாகத் தெரியவில்லை. ஓர் ஆடு குறுக்கிட்டு வந்து அசுத்தி செய்துவிட்டுச் சென்றது. நோய் பிடித்த சொறிநாய்கள் அலைகின்றன. ஆடு, நாய் எல்லாவற்றிலும் இறைவன் இருக்கின்றான் தான். என்றாலும் புனிதமான இக்கோவிலை அதிக சுத்தமாக வைத்துக் கொள்ள முடியாதா?

இதற்கு யார் பொறுப்பு என்று கேட்டேன். திருவிழாக் காலத்தில் கிராம சபையார் ஊரில் சுகாதார வசதிகள் செய்து, கோவிலையும் சுத்தமாக வைத்திருப்பரென்று அன்பரொருவர்

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ரொடீஷிய நெருக்கடி அபாயகட்டத்தை நோக்கிமுன்னேறிவருகிறது

## சுதந்திரப்பிரகடனம் வேண்டாம் என வில்சன் இறுதி வேண்டுகோள்

### முன்னுள் பிரதமருக்கு கட்டுப்பாடு: காமன்வெல்த் குழுவுக்கு ஸ்மித் எதிர்ப்பு

ஸாலிஸ்பரி, அக். 19

ரொடீஷிய நெருக்கடி இப்போது வெகுவாக அதிகரித்துவிட்டது. இன்று நடைபெறும் மந்திரி சபைக் கூட்டத்தில் ஒருதலைப்பட்ச சுதந்திரப் பிரகடன கொள்கை சம்பந்தமாக முடிவு செய்யப்படும் என பிரதமர் இயான்ஸ்மித் கூறினுர். இதற்கிடையில் பிரிட்டிஷ் பிரதமர் திரு. வில்சன் ரொடீஷியப் பிரதமருக்கு அனுப்பியுள்ள கடைசி வேண்டுகோளில் ஒருதலைப்பட்ச சுதந்திரப் பிரகடனத்தை மேற்கொள்ள வேண்டாமெனக் கேட்டுக்கொண்டிருக்கிருர்.

காமன்வெல்த்சமாதானக் குழுவை அனுப்பவேண்டுமென்ற பிரிட்டிஷ் யோசனையைத் திரு. ஸ்மித் நிராகரித்ததைத் தொடர்ந்து வில்சன் இந்த அவசரச் செய்தியை அனுப்பினுர்.

காமன்வெல்த்குழு. நாடுகள் ரொடீஷியப்பிரச்னை பற்றிப் பேசத் தகுதியற்றவை என்றும், ரொடீஷியாவின் தற்போதைய அரசியலமைப்புக்கு அவைமாருக இருக்கின்றன ஒன்றும் ஸ்மித் கூறியிருக்கிருர்.

திரு. வில்சன் தமது வேண்டுகோளில், மேலும் பேச்சுக்கள் நடத்த பிரிட்டன் தயாராய் இருக்கிறதென்று கூறியிருப்பதுடன் ரொடீஷியாவின் அமைதியைக் கருதியும், ஆபிரிக்கக் கண்டத்தின் அமைதியைக் கருதியும் ஒருதலைப்பட்ச சுதந்திரப் பிரகடனம் வேண்டாம் எனக்கேட்டுக் கொண்டிருக்கிருர்.

சட்டவிரோதமான இத்தகைய பிரகடனத்தின் மூலம் ஏற்படவிருக்கும் பெரும் விளைவுகளைக்குறித்தும் அவர் எச்சரித்திருக்கிருர்.

இதற்கிடையில் ஆபிரிக்கர்களுக்குச் சாதகமான கருத்துக்களைத் தெரிவித்து வந்த முன்னுள் ரொடீஷியப் பிரதமர் திரு. கரிபீல்ட் டொட் மீது ஸ்மித் அரசாங்கம் கட்டுப்பாடு விதித்திருக்கிறது. ஸாலிஸ்பரியிலிருந்து 280 மைல் தூரத்திலுள்ள தனது பண்ணையிலேயே அவர் இருக்கவேண்டுமென உத்தரவிடப்பட்டிருக்கிறது.

திரு. ஸ்மித் நேற்று நடத்திய பத்திரிகை நிருபர்கள் மகாநாட்டில் காமன்வெல்த் தூதுக்குழு ஏன் சமாதான முயற்சிக்குத் தகுதியில்லை என்பதை விளக்கினுர்.

''இந்தியா—பாகிஸ்தான் ஆகிய நாடுகள் ஒன்ருேடொன்று அடித்துக்கொண்டிருக்கின்றன. ஏடனில் அவசரகாலச் சட்டம் அமுல் நடத்தப்படுகிறது. நைஜீரியாவில் தேர்தல் குழப்பங்கள் ஏற்பட்டிருக்கின்றன. சைப்ரஸ், காஞ ஆகிய நாடுகளில் இதே போல் அரசியல் குழப்பங்கள் உள்ளன. பாகிஸ்தான்—மலேசியா தகராறு ஏற்பட்டுள்ளது. எல்லாவற்றிற்கும் மேலாக ஜனநாயக ஆட்சி எனக் கூறப்படும் பிரிட்டிஷ் அரசாங்கம் எச்சமயமும் வீழ்ச்சியடையும் நிலையிலிருக்கிறது. இப்படிப்பட்ட நாடுகள் ரொடீஷியாவுக்குச் சமாதானத் தூதுவர என்ன தகுதியிருக்கிறது'' என ஸ்மித் கேட்டார்.

## ஸ்ரீநகர் ஆர்ப்பாட்டத்தில் 15 பொலிசார் காயம்

### பொலிஸ் துப்பாக்கி பிரயோகம்

ராவல்பிண்டி, அக். 19

ஸ்ரீநகரில் நேற்று நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின் காரணமாக ஒரு ஜில்லா மஜிஸ்டிரேட், ஒரு பொலிஸ் சுப்ரீண்டன் உட்பட 15 பொலிசார் காயமடைந்ததாக பாகிஸ்தான் வானெலி அறிவித்தது.

பல்லாயிரம் முஸ்லிம்கள் கலந்துகொண்ட இந்த ஆர்ப்பாட்டத்தைக் கலைக்க பொலிசார் முதலில் கண்ணீர்ப்புகை பிரயோகமும், பின் தடியடியும், இறுதியில் துப்பாக்கிப் பிரயோகமும் செய்ததாகவும், ஆர்ப்பாட்டக்காரர்கள் 'எங்களுக்கு சர்வஜன வாக்கெடுப்பு வேண்டும்' எனக் கோஷமிட்டு. கார்களுக்குத் தீமூட்டியும், பொலிசார் மீது கற்களை வீசியும் குழப்பம் விளைவித்ததாயும் அது மேலும் அறிவித்தது.

ஸ்ரீநகருக்கும் ஹஸ்ரத்பாதுக்கு மிடையேயான ரஸ்தாவை பொலிசார் பலமாகக் காவல் புரிந்து வருகிருர்கள்.

காஷ்மீரில் இதுவரை 100 மாணவர்கள் கைதுசெய்யப்பட்டிருப்பதாயும், 70,000க்கு மேற்பட்ட முஸ்லிம்களை இந்தியத் துருப்புக்கள் அஸாத்காஷ்மீருக்குள் விரட்டியிருப்பதாயும் அதுமேலும் கூறியது.

''இந்தியத் துருப்புக்கள் கள் 40 கிராமங்களை கொள்ளையடித்து, தீமூட்டின. முஸ்லிம்கள் உயிருடன் எரிக்கப்பட்டார்கள். இளம் முஸ்லிம் பெண்கள் கடத்திச் செல்லப்பட்டார்கள்'' என்றும் பாகிஸ்தான் ரேடியோ கூறியது.

17 நாள் இந்தோ-பாகிஸ்தான் சண்டையில் பாகிஸ்தானுக்கு ஏற்பட்டசேதம் குறித்து, இந்தியா கூறும் புள்ளிவிபரம் சரியல்ல என விமானப்படைத் தளபதி நூர்கான் கூறியிருக்கிருர். பதிலாக இந்திய சேதம் பற்றி அவர் பின்வருமாறு அறிவித்திருக்கிருர்.

''110 இந்திய விமானங்கள் அழிக்கப்பட்டன. 19 விமானங்கள் சேதப்படுத்தப்பட்டன. 149 டாங்கிகள் அழிக்கப்பட்டு, 56 டாங்கிகள் சேதப்படுத்தப்பட்டன. சகல வகையான 666 வாகனங்கள் அழிக்கப்பட்டு, 69 வாகனங்கள் முடமாக்கப்பட்டன. 62 பீரங்கிகள் அழிக்கப்பட்டு, 19 பீரங்கிகள் முடமாக்கப்பட்டன'' என்று நூர்கான் கூறினுர்,

## "எங்கள் சரக்குகளை பாகிஸ்தானில் இறக்காதே"

### அன்னிய கப்பல் கம்பெனிகளுக்கு இந்தியா எச்சரிக்கை

புதுடில்லி, அக். 19

இந்தியாவுக்குவரும் சரக்குகளை இந்தியத் துறைமுகங்களிலோ, அல்லது நடுநிலைமை நாட்டுத் துறைமுகங்களிலோ இறக்கவேண்டுமென்ற கோரிக்கையை உதாசீனம் செய்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என போக்குவரத்து மந்திரி திரு. ராஜ்பகதூர் வெளிநாட்டு கப்பல் சொந்தக்காரர்களுக்கும், ஏஜெண்டுகளுக்கும் எச்சரிக்கை விடுத்திருக்கிருர்.

இந்தியாவுக்குச் சரக்கு ஏற்றிவந்த 16 கப்பல்கள் பாகிஸ்தான் துறைமுகங்களில் இப்போது நிற்பதாய் அவர் கூறினுர். இவற்றில் 10 கப்பல்கள் சண்டைக்கு முன் கராச்சித் துறைமுகம் சென்றன என்றும், மற்றும் 6 கப்பல்கள் வேண்டும் என்றே பாகிஸ்தானுக்குச் சென்றன என்றும், பம்பாய் வந்த ஒரு கப்பல், இந்திய சரக்குகள்பற்றி அறிவிக்காமலேயே கராச்சி சென்றது என்றும் அவர் கூறினுர்,

பாகிஸ்தான் இதுவரை 2 கோடி பவுன் பெறுமதியான இந்திய சரக்குகளைக் கைப்பற்றியிருப்பதாக திரு. ராஜ்பகதூர் தொடர்ந்து கூறினுர்.

21 இந்தியக் கப்பல்கள் தற்போது பாகிஸ்தான் துறைமுகங்களில் நிற்பதாயும், இவற்றைப் பறிமுதல் செய்வதா இல்லையா என்பது இவ்வாரம் தீர்மானிக்கப்படும் என்றும் பாகிஸ்தான் செய்திகள் கூறின.

## கிழக்கு பாகிஸ்தான் ஜில்லாக்களில் புரட்சி சபை கிளைகள் ஸ்தாபிதம்

டாக்கா, அக், 18

கிழக்கு பாகிஸ்தான் சுதந்திரப் புரட்சிசபை அநேகமாக ஒவ்வொரு ஜில்லாவிலும் தன் கிளைகளை நிறுவியிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

மேற்கு பாகிஸ்தானின் காலனியாகவும். பாகிஸ்தானில் இரண்டாம்தரப் பிரஜைகளாகவும் இருக்க கிழக்குவங்க மக்கள் இனியும் தயாராய் இல்லையென புரட்சிசபை அறிவித்திருக்கிறது.

கிழக்கு பாகிஸ்தான் மக்களுக்கு தங்கள் நாட்டில் முக்கிய பதவி எதுவும் அளிக்கப்படவில்லை என்றும், பஞ்சாபிய அயூப் ஆட்சி, தங்களை அலட்சியப்படுத்தி வருவதாயும் அது மேலும் கூறியுள்ளது.

கிழக்குப் பாகிஸ்தானில் நாளுக்குநாள் வளர்ந்து வரும் சுதந்திர உணர்ச்சியைத் திசைதிருப்பும் பொருட்டு டாக்காவில் வருகிற வெள்ளிக்கிழமை ''இந்தியா நசுக்கும் தினமாக'' அனுஷ்டிக்கும்படி ஆளும் கட்சியான முஸ்லிம் லீக் கேட்டிருக்கிறது.

உத்தேச இத்தகையஆர்ப்பாட்டம் குறித்து இந்தியா வன்மையான ஆட்சேபம் தெரிவித்திருக்கிறது. இவ்வித அரசியல் ஆர்ப்பாட்டம் சிறுபான்மையினர்மீது வன்முறைச் செயல்களைத் தூண்டிவிடும் என்றும், அதன் தீயநோக்கத்தை பாகிஸ்தான் அரசாங்கம் உணர வேண்டும் என்றும் ஆட்சேபனைக் குறிப்பு கூறுகிறது.

டாக்காவிலுள்ள இந்திய ஹைகமிஷனுக்கும் இந்தியர்களுக்கும் குறிப்பிட்ட தினத்தில் பாதுகாப்பு அளிக்குமாறும் அது கேட்டிருக்கிறது.

### 'பத்து லட்சம் பேர் கொண்டகாவல்படை'

--சாஸ்திரி

பம்பாய், அக். 19

''பாதுகாப்புத் தேவையில் சுயதேவைப்பூர்த்திக்கும், வலிமை பெறவும் 10 ஆண்டு காலவரம்புக்கு மக்கள் தயாராய் இருக்கவேண்டும்'' என பிரதமர் சாஸ்திரி கேட்டுக்கொண்டிருக்கிருர்.

நாட்டில் ஒரு புரட்சி ஏற்பட்டிருக்கிறதென்றும், இந்தியா ஒரு அங்குல நிலத்தைக் கூட அந்நியருக்குத் தத்தம் செய்யத் தயாராய் இல்லையென்பதை பிற நாடுகள் புரிந்துகொள்ளவேண்டும் என்றும் அவர் கூறினுர்.

பிரதமர் சாஸ்திரி ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட மக்களைக் கொண்ட கூட்டத்தில் பேசினுர். 10 லட்சம் பேர் கொண்ட உள்நாட்டு காவல் படை திரட்டப்படும் என்றும் அவர் கூறினுர்.

### கிம்பா மந்திரிசபை

லியப்போல்ட்விலி, அக். 19

திரு. கிம்பாவின் தலைமையிலான புதிய காங்கோ அரசாங்கம் நேற்றுப் பதவியேற்றது. பழைய ஷோம்பே மந்திரிகள் [illegible] இதில் இடம்பெற்றிருக்கின்றனர்.

### ஜோன்ஸன் மெதுவாக குணமடைகிருர்

வாஷிங்டன், அக். 19

கடந்த பதினுென்று தினங்களாக ஆஸ்பத்திரியிலிருக்கும் அமெரிக்க ஜனுதிபதி ஜோன்ஸன் எதிர்பார்த்ததை தவிட மெதுவாகக் குணமடைந்து வருகிருரென்றும், மீண்டும் கடமைப் பொறுப்புக்களை ஏற்க மேலும் 6 வாரங்கள் பிடிக்கும் எனவும் வெள்ளை மாளிகை அறிவிப்பு கூறியது.

### விமானவிபத்தில் 16 பேர் மரணம்

#### கொலம்பியாவில் சம்பவம்

பகோட்டா, அக். 18

கொலம்பியா டிஸி-3 என்ற வர்த்தக விமானம் புக்காரமங்கா நகரத்துக்கு அருகே இன்னெரு சிறு விமானத்துடன் மோதுண்டு நொறுங்கி வீழ்ந்தது. இதனுல் 16பேர் ஸ்தலத்தில் மரணமானுர்கள்.

பகோட்டாவுக்கும், புக்காரமங்காவுக்குமிடையே 12 பிரயாணிகளுடனும், மூன்று விமானமோட்டிகளுடனும் பறந்துசென்ற 'டிஸி—3' விமானம், 22 வயதுடைய விமானமோட்டுவதில் பயிற்சிபெறும் ஒருவர் ஓட்டிய விமானம் ஒன்றுடன் மோதியது.

வாஷிங்டன், அக். 19

பாகிஸ்தான் அதிபர் அயூப்கானின் விஜயம்குறித்துத் திட்டம் எதுவும் இல்லையென வெள்ளைமாளிகை அறிவித்திருக்கிறது.

### படைக்குப் பதில் கடைக்கண் வீச்சு!

கேவ்டாக், அக். 18

பயமுறுத்தல், ஆயுதமிரட்டல் ஆகியவற்றினுல் சிக்கிம் எல்லையில் இந்தியாவைப் பணிய வைக்கத் தவறியதால், இந்தியத் துருப்புக்களை மயக்க, சீன இளம் பெண்களை கணவாய் எல்லை வரை கொண்டுவந்து நிறுத்தியுள்ளது.

நலுவா கணவாயிலிருந்து திரும்பிய ஒரு புகைப்படக்காரர் இத்தகவலைக் கூறினுர். இப்பெண்களுக்காக திட்டவட்டமான பணிகள் எதையும் சீனர்கள் தரவில்லையென்றும், எல்லையில் இப்பெண்கள் வேலையில்லாமல் அங்குமிங்கும் ஒய்யாரமாக நடமாடுகிருர்களாம்.

### பதினுெரு அமெரிக்க விமானங்கள் நாசம்

சைகோன், அக் 19

வடவியட்னும்மீது அமெரிக்க விமானங்கள் நேற்று தொடர்ந்து நடத்தி பாலங்கள், கட்டிடங்கள், சாலைகள், ஆயுதக்கிடங்குகள் ஆகியவற்றுக்குப் பெரும் சேதம் விளைவித்ததாய் அறிவிக்கப்படுகிறது.

இத்தாக்குதலின் போது பதினுெரு அமெரிக்க விமானங்கள் சுட்டுவீழ்த்தப்பட்டனவென்றும், பல விமானிகள் சிறைபிடிக்கப்பட்டனரென்றும் ஹானேய் செய்தியொன்று கூறியது.

புதுடில்லி, அக். 18

அரசாங்கச் செலவில் ஸ்ரீமதி இந்திராகாந்தி வைத்திருக்கும் காரின்சாரதி குஞ்சிலால் தம்முடைய ஒரு மாதச் சம்பளம் பூராவையும் தேசியப் பாதுகாப்பு நிதிக்குக் கொடுத்திருக்கின்ருர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்க ஊழியருக்கு அரசியல் உரிமைகள்

## அடுத்தவருட முற்பகுதியில் அமுலாகும்

பம்பலப்பிட்டி, செவ்.

அடுத்த வருட முற்பகுதியில் அரசாங்க ஊழியர்களில் சில வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு அரசியல் உரிமைகள் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அறியப்படுகிறது. எந்தெந்த வகுப்பைச் சேர்ந்த அரசாங்க ஊழியர்களுக்கு அரசியலுரிமை வழங்கலாமென்பது பற்றி அறிக்கை சமர்ப்பிக்குமாறு நிதிமந்திரி கோரப்பட்டுள்ளாராம். அரசியலுரிமைகள் பற்றி ஆராய முன்னைய அரசாங்கங்களால் நியமிக்கப்பட்ட கமிட்டிகளின் சிபார்சின் அடிப்படையில் தொழில் வீடமைப்பு மந்திரி திரு. முகமதின் உதவியுடன் நிதிமந்திரி இதுபற்றிஇவ்வருட முடிவுக்குள் அறிக்கை சமர்ப்பிப்பாரெனவும் அரசாங்க வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

ஆசிரியர்களுக்கு அரசியலுரிமை வழங்குவதை கல்வி மந்திரி ஆட்சேபித்து வந்த போதிலும் நிதிமந்திரியின் அறிக்கை அரசாங்கத்துக்கு கிடைத்த பின்னரே அது பற்றி மந்திரிசபை ஆராயுமெனச் சொல்லப்படுகிறது.

அண்மையில் ஜனநாயக பொதுச்சேவை தொழிற்சங்கம் ஒன்றை அங்குரார்ப்பணம் செய்துவைக்கும் போது ராஜாங்கமந்திரி திரு ஜே. ஆர். ஜெயவர்த்தனவும் சிம்மாசனப்பிரசங்கத்தில் கூறப்பட்டதற்கிணங்க விரைவில் சில அரசாங்க ஊழியருக்கு அரசியல் உரிமை வழங்கப்படவிருப்பதாகத் தெரிவித்தார்.

# இசை அரங்கேற்றம்

நெடுந்தீவு, செவ்.

நெடுந்தீவிலிருந்து முதல் முதலாக அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலிருந்து சங்கீதபூஷணம் பட்டம்பெற்று வெளியாகிய திரு. வே. சுந்தரலிங்கத்தின் அரங்கேற்ற விழா நெடுந்தீவு மகாவித்தியாலயத்தில் பாராளுமன்ற உறுப்பினர் திரு. வி.நவரத்தினம் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

ஆஸ்பத்திரிகளில்

# மருந்துக்கு தட்டுப்பாடு

பம்பலப்பிட்டி, செவ்.

மாகாணங்களிள்ள அரசினர் ஆஸ்பத்திரிகளில் நோயாளிகளுக்கு தேவையான மருந்து வகைகள் உரிய நேரத்தில் கிடைப்பதில்லை என பல ஆஸ்பத்திரி அதிகாரிகள் உதவி சுகாதார அதிகாரி டாக்டர் டி. ஏ. டி. பெரேராவிற்கு முறைப்பாடு செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மருந்துவகைகள் ஆஸ்பத்திரியில் கிடைக்காததால் நோயாளிகள் தனியார் மருந்துச்சாலைகளில் மருந்துகளுக்குப் பெருந்தொகையான பணம் கொடுத்து வாங்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளதென்றும் தெரிய வருகிறது.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் இருந்து ஒரு அதிகாரி சென்ற வாரம் இங்கே வந்து மருந்து வகைகளை எடுத்துச் செல்லவேண்டியிருந்தது. மருந்து பற்றாக்குறை பற்றி சிவில் மெடிக்கல் பகுதிக்கு பலமுறை நினைவூட்டியிருந்தும் கவனிக்காததன் காரணத்தினாலேயே ஒரு அதிகாரி இங்கு வரவேண்டி நேரிட்டது எனவும் தெரிய வருகிறது.

# சிமெந்து தட்டுப்பாடு

முல்லைத்தீவு, செவ்.

முல்லைத்தீவுப் பகுதியில் கடந்த சூறாவளியினால் வீடு இழந்தோர் பலர் சிமெந்து கிடையாத கஷ்டத்தினால் இடிந்து கிடக்கும் வீடுகளைக் கட்டமுடியாது தவிக்கின்றனர். முல்லைத்தீவுப் பலநோக்குக் கூட்டுறவுச் சமாஜத்துக்குக் கொடுபட்ட கோட்டாச் சிமெந்து தற்போது நிறுத்தப்பட்டதே இந்நிலைக்குக் காரணம். கள்ளச்சந்தைக்காரர் சிமெந்தைக் கொள்ளைலாபத்துடன் விற்பதைத் தடுக்க உடனடியாக முல்லைத்தீவுப் பலநோக்குக்கூட்டுறவு சமாஜத்துக்கு வழங்கப்பட்ட 'கோட்டா' முறையை அமுல்செய்துதரும்படி வீடிழந்தோர் வவனியா எம்.பி. திரு. சிவசிதம்பரத்தைக் கேட்கவிருக்கின்றனர்.


REGAL—JAFFNA

NOW SHOWING!

FRANK SINATRA
DEAN MARTIN
in
SERGEANTS 3
(Panavision - Color)



# அன்பின் இன்பக் கனி



அவன் ஒஸ்டர்மில்க் அருந்தி,
ஆரோக்கியமாகவும், திடகாத்திரமாகவும்
வளர்வதைக்கண்டு மகிழ்ச்சியடைவார்கள்.

ஒஸ்டர்மில்க் சுத்தமான, தூய்மை மாருத பூரண பால் உணவு, பச்சிளங் குழந்தையின் மென்மையான ஜீரணத்திற்கு பாதுகாப்பானது. அயச்சத்தும் விட்டமின் Dயும் சேர்க்கப்பட்டிருக்கும் ஒஸ்டர்மில்க் குழந்தைகளை திடகாத்திரமாகவும், ஆரோக்கியமாகவும் வளரச்செய்கிறது.




துவக்கத்திலிருந்தே ஒஸ்டர்மில்க் அருந்தும்
குழந்தைகள் பெலனான சுக வளர்ச்சி பெறுகிறார்கள்.

# ஒஸ்டர்மில்க்

173/66

கிளக்ஸோ—அலன்பரீஸ் சிலோன் லிமிட்டட்., தபாற் பெட்டி 23, கொழும்பு.



இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

கெப்பிட்டல் (கொழும்பு) — மொடேர்ன் (பண்டாரவளை) — விஜிதா (ஹட்டன்)

மொடேர்ன் (பதுளை) — வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

தினசரி மாலை 6-00, 9-30 க்கும்
சனி, ஞாயிறு காலை 10 மணிக்கும்

"இன்பம் தேடுது இளம் மனசு! - அதிலே
இருக்கும் வகைகள் பல தினுசு!
அன்பு நிறைந்ததும் பெண்ணிடத்தில் - என்ற
அறிவு விளக்குது இப்படத்தில்"



முத்துராமன், புதுமுகம் நளினி, அசோகன், நாகேஷ்,
ராமதாஸ், மனோரமா, சின்னப்ப தேவர்
நடித்த

# தெய்வத் திருமகள்



வெங்காயம், தக்காளி, மிளகாய், கத்தரி, கோவா முதலிய பயிர்களுள் உண்டாகும் களைப்புல்லை அழிப்பதற்கு

புதிய மருந்து

# டெக்தால்


DACTHAL

Agents :

ROYAL DISPENSARY — JAFFNA

PHONE: 397


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உதைபந்தாட்டம்

# இரு ஆட்டங்களிலும் சென். ஜோன்ஸ் வெற்றி!

யாழ்ப்பாணம், புதன்

இளவாலை சென். ஹென்றீஸ் கல்லூரிக்கும் யாழ். சென்ஜோன்ஸ் கல்லூரிக்குமிடையே நடைபெற்ற சிநேகபூர்வமான முதலாம் பிரிவு, இரண்டாம் பிரிவு உதைபந்தாட்டப்போட்டிகளில் சென். ஜோன்ஸ் கல்லூரி வெற்றியீட்டியது. முதலில் நடைபெற்ற இரண்டாம் பிரிவுப் போட்டியின் ஆரம்பத்தில் இருந்து கடைசிவரை இரு கோஷ்டிகளும் ஒன்றுக்கொன்று விட்டுக்கொடுக்காமல் விளையாடினார்கள். இடைவேளைக்கு முன் சென். ஜோன்ஸ் கல்லூரி முன்னணிவீரரான கணேசலிங்கம் ஒரு கோலை சென்ஹன்றீஸுக்குள் தள்ளினார். இடைவேளைக்குப் பின் நடந்த போட்டியில் சென். ஹென்றீஸ் கல்லூரி வீரர் கென்றி ஒரு கோலை சென். ஜோன்ஸுக்குள் போட்டார். சென்ஜோன்ஸ் கல்லூரி முன்னணி வீரர் அடுத்து ஒரு கோலைப்போட்டார். முடிவில் சென். ஜோன்ஸ்கல்லூரியின் 2-ம் பிரிவு சென். ஹென்றீஸ் கல்லூரியை 2-1 கோல்களால் தோற்கடித்தது.

முதல் பிரிவுப்போட்டி மிகவும்விறுவிறுப்பாக நடைபெற்றது. இடைவேளைக்கு முன் சென். ஜோன்ஸ்கல்லூரியைச்சேர்ந்த சூரியகுமார் மின்னல்வேகத்தில் ஒருகோலை உதைத்துத்தள்ளினார். இடைவேளைக்கு முன்னர் சென். ஹென்றீஸ் கல்லூரி ஒன்றுமே போடவில்லை. இடைவேளைக்குப் பின் நடந்த போட்டியில் சென்ஹன்றீஸ்கல்லூரி ஒரு கோலைஅழகாகப்போட்டது. அதையடுத்துசென்ஜோன்ஸ் வீரரான விபுலானந்தன் ஒரு கோலைப் போட்டார். போட்டிமுடிவில் சென் ஜோன்ஸ்கல்லூரி சென். ஹென்றீஸ்கல்லூரியை 2-1 கோல்களால் தோற்கடித்தது? சென். ஹென்றீஸ் கல்லூரி வீரர்கள் தோற்றுப்போனபோதிலும் மிகவும் திறமையாக விளையாடினார்கள். சென். ஹென்றீஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப் போட்டிகளுக்கு திரு. கணேசசுந்தரம், திரு. சண்முகராசா ஆகியோர் மத்தியஸ்தம் வகித்தனர்.

உரும்பராய்

# இந்துக்கல்லூரிக்கு வெற்றி!

யாழ்ப்பாணம், புதன்

உரும்பராய் இந்துக் கல்லூரிக்கும்' கொக்குவில் இந்துக் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற 2-ம் பிரிவுக்கான உதைபந்தாட்டப் போட்டியில் உரும்பராய் இந்துக்கல்லூரி கொக்குவில் இந்துக் கல்லூரியை 3—2 கோல்களால் தோற்கடித்தது.

இடைவேளைக்கு முன்னர் கொக்குவில் இந்துக் கல்லூரி முன்னணி வீரர்கள் மூகவும் திறமையாக விளையாடி உரும்பராய் இந்துக் கோலுக்குள் ஒரு கோலை இறக்கினார்கள். சிலநிமிடங்களின் பின் கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு ஒரு 'பனல்டி' கிடைத்தது. இந்தப் 'பனல்டி'யைப் பாவித்து கொக்குவில் இந்துக் கல்லூரியினர் தமது கோல் எண்ணிக்கையை இரண்டாக்கினார்கள்.

போட்டி முடிவதற்கு பதினைந்துநிமிடத்துக்குள் உரும்பராய் இந்துக் கல்லூரி முன்னணி வீரர்கள் உணர்ச்சிவசப்பெற்றவர்களாக புது வேகத்துடன் விளையாடத் தொடங்கினார்கள். ஐந்து நிமிடத்துக்கள் 'கட கட' வென்று 2 கோல்களை உரும்பராய் இந்துக் கல்லூரியினர் கொக்குவில் இந்துக் கல்லூரிக்குள் தள்ளினார்கள் இக்கட்டத்தில் போட்டி மிகவும் விறுவிறுப்பாகக் காணப்பட்டது. உரும்பராய் இந்துக் கல்லூரி முன்னணி வீரர்களின் 'பாசிந்' விளையாட்டு இக்கட்டத்தில் உச்சக்கட்டத்தையடைந்திருந்தது. போட்டி முடிவதற்கு ஐந்து நிமிடத்துக்குமுன்னர் அடுத்தும் ஒரு கோலை உரும்பராய் இந்துக்கல்லூரியினர் இறக்கினார்கள்.

உதைபந்தாட்ட ரசிகர்களுக்கு உற்சாகத்தைக் கொடுக்கக்கூடிய விதத்தில் அமைந்திருந்த இப்போட்டி உரும்பராய் இந்துக் கல்லூரி விளையாட்டரங்கில் நடைபெற்றது.———

## கைது!

முல்லைத்தீவு, செவ்.

முல்லைத்தீவுப் பகுதியில் நேற்றுவரை ஆறு சட்ட விரோதக்காரரை முல்லைத்தீவிலுள்ளஇராணுவத்தைச் சேர்ந்த லெப்டினன் விஜயசிங்கா, சார்ஜண்ட் அபயரட்ண ஆகியோரால் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

# விக்ரோறியா வெற்றி

சுழிபுரம், செவ்.

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி இரண்டாம் பிரிவு கோஷ்டிக்கும் வேலணை மத்திய மகா வித்தியாலய இரண்டாம் பிரிவு கோஷ்டிக்குமிடையே சிநேகபூர்வமாக நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி 5—0 கோல்களைப் போட்டு வெற்றிபெற்றது. திரு. எஸ். சண்முகநாதன் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

# விளையாட்டுக்கழக வருடாந்தக் கூட்டம்

யாழ்ப்பாணம், புதன்

''இந்நாட்டின் எதிர் காலத்தை நிர்ணயிக்கவேண்டியவர்கள் இப்போதைய இளைஞர்கள். அவர்கள் திடகாத்திரத்துடன் இருந்தால் தான் வருங்காலசமுதாயம் வாழ்வும் வளமும் பெறும்''

பருத்தித்துறை ஒலிம்பிக் விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் நடைபெற்றபோது, பருத்தித்துறை நகரசபைத்தலைவர் திரு. நடராசா பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேற்படி கழகத்தின் ஆதரவில் வருடாவருடம் நடைபெறும் உடற்பயிற்சிப் போட்டிகளை இம்முறையும் நடாத்துவதென தீர்மானிக்கப்பட்டது.




## கொழும்பு
புதன் 20 - 10 - 65

(செய்திகள்: காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00).

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவ நற்சிந்தனை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-00 துதிப்பாடல்கள், 7-30 தேர்ந்தஇசை, 7-45 திரைஇசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நிலைய ஒலிப்பதிவுகள், 5-45 படப் பாட்டுக்கள்.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 புல்லாங்குழல், 7-15 பேச்சு, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 வாத்திய இசை, 9-30 நேயர்விருப்பம், 10-00 தேர்ந்தஇசை.

# வரி விளம்பரம்

### தேவை

புத்தக மடியல் வேலை செய்வதற்கு அனுபவமுள்ள பெண்கள் தேவை. விபரங்களுக்கு: 'ஈழநாடு', யாழ்ப்பாணம். 1160

இரு குமாஸ்தா, ஒரு நிர்வாகி தேவை. செலுத்த விரும்பும் பிணை, எதிர்பார்க்கும் சம்பளம் குறித்து எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 41 மேற்பார்த்து, ஈழநாடு, யாழ்ப்பாணம். 1161

விற்பனையாளர்கள் தேவை. வயது: 20 — 30. சம்பளம் ரூபா 75/- —150/- எல்லாம் உட்பட. க. பொ. த. பரீட்சையில் எண், பாஷை உட்பட 5 பாடங்களில் ஒரே முறையில் சித்தியுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்தவர். பிணை ரூபா 300/- 6 மாதத்தின் பின்பே நிரந்தரமாக்கப்படும். 3-11-65க்கு முன் தலைவர், மாதகல் பலநோக்குச் சங்கம், மாதகல் என்ற விலாசத்துக்கு பதிவுத்தபால் மூலம் விண்ணப்பிக்கவும். கூட்டுறவுக் கலாசாலையில் பயிற்சி பெற்றவர் விரும்பத்தக்கது. வை. இராமசாமி, தலைவர். 1158

### விற்பனைக்கு

மயிலிட்டி - கட்டுவன் றோட்டுக்கருகிலுள்ள குளத்துக்கு தென்மேற்கே, சுமார் 32 பரப்பு நிலம் விற்பனைக்குண்டு. மின்சார வசதியுள்ளதும் பயிர்ச்செய்கைக்குகந்ததுமான கல்லில்லாப் பிரதேசம். பரப்பு ரூபா 1250/- விபரங்களுக்கு: வ. பாலசுப்பிரமணியம், 45, 36-வது ஒழுங்கை, வெள்ளவத்தை என எழுதுக. 1156

# போலி வசூலுக்கு தடை?

பம்பலப்பிட்டி, செவ்

சமூகசேவை என்ற போர்வையில் சிலர் சில காரணங்களுக்காகப் பணம் சேர்த்துத் தங்கள் சொந்த நோக்கிற்காகச் செலவுசெய்வதைத் தடுப்பதற்காகச் சமூகசேவை இலாகா சட்ட நகலொன்றைத் தயாரித்து வருவதாகத் தெரியவருகின்றது.

புதிதாகத் தயாரிக்கப் படவிருக்கும் சட்ட நகலின் படி பள்ளிக்கூடங்களும், சமயஸ்தாபனங்களும் பதிவு செய்யப்பட்ட சங்கங்களும் பணம் வசூலிக்கும் முறையில் பாதிக்கப்பட மாட்டதென அறிவிக்கப்பட்டுள்ளது.——

# மாணவர்களுக்கு நவீன விடுதிச்சாலை

பம்பலம்பிட்டி, செவ்.

தற்பொழுது குதிரைப் பந்தைய மைதானத்தில் கல்விபயிலும் சர்வகலாசாலை மாணவர்களுக்கு ஒரு நவீன விடுதிச்சாலையை அமைக்க தற்காலிக கல்வி மந்திரி திரு. காமினிஜெயசூரியா ஒரு புதிய திட்டமொன்றை உருவாக்கியுள்ளாரென அறிவிக்கப்பட்டுள்ளது.

# ஆசிரியர்களுக்கு வகுப்பு

யாழ்ப்பாணம், புதன்

''பாலர் பாடசாலையிலிருந்து பல்கலைக்கழகம் வரையும் பயில்வோர்க்கு இடநெருக்கடியேற்பட்டிருக்கும் இவ்வேளையில் தமிழ் ஆசிரியர்களும் உயர்தரப் பரீட்சையில்சித்தியடைந்தமாணவர்களும் தம் அறிவை விருத்தி செய்வதற்காகவும் பட்டதாரிகள் ஆகவும்கூடிய வாய்ப்பை அளிக்குமுகமாக வடஇலங்கைத் தமிழாசிரிய சங்கம் வெற்றித் திருநாளாகிய விஜயதசமித் தினத்தில் 'பொதுக்கலைத் தகுதித் தேர்வு'' வகுப்பினை ஆரம்பிப்பது பாராட்டக்கூடியதொன்று.

யாழ் மத்தியகல்லூரி அதிபர் திரு. ஈ. சபாலிங்கம் மத்தியகல்லூரி மேல்மாடி மண்டபத்தில், வடஇலங்கைத் தமிழாசிரிய சங்கத்தாரால் ஆரம்பிக்கப்பட்ட பொதுக்கலைத் தேர்வு வகுப்பினை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

# வளர்ந்தோர் கல்வி வகுப்புகள்

யாழ்ப்பாணம், புதன்

கிளிநொச்சி தொகுதியின் பல பகுதிகளிலும் வளர்ந்தோர் கல்வி வகுப்புகள் விரைவில் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன. இதற்கான முயற்சிகளை வளர்ந்தோர் கல்வி உத்தியோகத்தர் எடுத்து வருகிறார்.

கிளிநொச்சித் தொகுதி ஆசிரியர் சங்கமும், கிளிநொச்சி கிராம முன்னேற்றச்சங்கமும் இவ்வகுப்புகளை ஆரம்பித்து நடாத்த முன்வந்துள்ளன.———

# 2 படங்கள் மட்டும்

சென்னை, அக். 19

மின்சாரக்குறைவு காரணமாக வருகிற நவம்பர் முதல் திகதி முதல், தமிழ் நாட்டு சினிமாத்தியேட்டர்கள் நாளொன்றுக்கு இரு சினிமாப்படங்களை மட்டுமே காட்டவேண்டுமென உத்தரவிடப்பட்டிருக்கிறது

போன்-7213
பெட்டா பார்மஸி
ஆங்கில மருந்துகளுக்கு
23, டாம் வீதி, கொழும்பு 12



மலிவு விற்பனை
5-10-65 — 23-10-65
தீபாவளி
பண்டிகையை முன்னிட்டு
கண்கவர் டிசைன்களில்
சாறிகளும் றெடிமேட் உடுப்புகளும்
மற்றும்
பலவிதமான ஜவுளி தினிசுகளும்
குறைந்த விலைகளில் விற்பனை செய்யப்படுகிறது.
கையிருப்பு முடியுமுன்
உங்களுக்குத் தேவையானவற்றைதெரிவு செய்ய
அன்புடன் அழைக்கின்றோம்.
திருமண வைபவங்களுக்கு தேவையான
கூறை சாறிகள்
பலவிதமான டிசைன்களில் எம்மிடம் கையிருப்பில் உண்டு.
மைலன்ட்ஸ்
115, 117, கே. கே. எஸ். றோட், — யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமாதானத்தீர்வே இந்தியாவின் நோக்கம் சர்வஜன வாக்கெடுப்பு என்ற பேச்சுக்கே இடமில்லை"

## டட்லியுடன் பேச்சுபற்றி இந்தியமந்திரி திருப்தி

கொழும்பு, திங்கள்

பிரதமர் திரு. டட் லி சேனநாயகாவுடன் தாம் நடத்திய பேச்சுக்கள் பற்றி மிகவும் திருப்தியடைவதாக இந்திய உதவி வெளிநாட்டு மந்திரி திரு. தினேஷ் சிங் கொழும்பில் பத்திரிகை நிருபர்கள் மகாநாட்டில் கூறினார்.

இந்திய பாகிஸ்தான் பிரச்னையை திரு. டட்லி நன்கு அறிந்திருப்பதாய்க் கூறிய சிங், பிரதமருடன் தாம் நடத்திய சம்பாஷணைகள் பற்றி விபரமாகக் கூறுவது உசிதமானதல்ல என்றும் தெரிவித்தார்.

இலங்கைத் தலைவர்களுடன் நடத்திய சம்பாஷணை பற்றி மிகவும் மனத்திருப்தியுடன் தாம் இந்தியா திரும்புவதாயும் தினேஷ்சிங் குறிப்பிட்டார்.

''இந்தியப் பிரதேசத்திற்குள் பாகிஸ்தான் ஊடுருவாளர்களை அனுப்பிவைத்ததைத் தொடர்ந்தே இந்தோ-பாக். தகராறு ஆரம்பமாகியது. இப்பிரச்னை பற்றி இலங்கைப் பிரதமரும் அறிந்திருக்கிறார்.

''பாகிஸ்தானும், அதன் நண்பர்களும் நிலைமைபற்றி காரிய சாத்தியமான நடைமுறையைப் பின்பற்றினல் மட்டுமே இந்தோ-பாகிஸ்தான் பிரச்னைக்கு ஒரு பரிகாரம் காணமுடியும். காஷ்மீர் பற்றிய பாகிஸ்தான் வாதம் பொய் என்றும் சிங் கூறினார்.

''முஸ்லீம்கள் பெரும்பான்மையாக உள்ள ஒவ்வொரு நாட்டையும் தனக்கு சொந்தம் என பாகிஸ்தான் உரிமை கொண்டாட விருக்சிறது. உலகத்திலுள்ள சகல முஸ்லீம்களுக்கும்பாது காவலன், தானே என அது கூறுகிறதா? இந்தியாவில் 6 கோடி முஸ்லீம்கள் இருக்கிறார்கள். அவர்கள் நலன்களை பாகிஸ்தான் கவனிக்கப் போகிறதா? அப்படியானல் அது எங்கள் உள்நாட்டு விவகாரத்தில் தலையிடுவதாக அர்த்தமில்லையா? என நிருபர்களின் கேள்விக்கு அவர் எதிர்க் கேள்வி விடுத்தார்.

''ஆரம்பத்திலிருந்தே பாகிஸ்தானுடன் அமைதியாக வாழும் பொருட்டு ஒத்துழைப்பை இந்தியாநாடியது. ஆனல் பாகிஸ்தானின் போக்கு இதற்கு ஏற்றதாக இருக்கவில்லை. பாகிஸ்தான் தேசியத்துக்கு ஏற்காத மத அடிப்படையிலான நாட்டை சிருஷ்டிக்க முயன்றுவருகிறது'' என்றும் சிங் கூறினார்.

ஜனாதிபதி அயூப்கானுக்கும் பிரதமர் சாஸ்திரிக்குமிடையே சமீபத்தில் சந்திப்பு நடைபெறுமா எனக் கேட்கப்பட்டதற்கு, தீர்வு எதுவும் ஏற்படும் சாத்தியம் இருந்தால்தான் இவ்வித சந்திப்பு பயனுள்ளதாய் இருக்கும் என அவர் கூறினார். இந்தியாஎப்போதும் சமாதானத் தீர்வையே நாடுகிறது என்றும் ஆனல் சமாதானதீர்வு எதற்கும் பாகிஸ்தான் ஆவல் கொண்டிருப்பதாய்த் தெரியவில்லை என்றும் தினேஷ்சிங் கூறினார்.

''காஷ்மீரில் பாகிஸ்தான் உரிமை எதுவும் கோரினல் இந்தியா அதைப் பரிசீலித்திருக்கும். ஆனல் காஷ்மீர் தன்னுடையதே என பாகிஸ்தான் கூறுவதால் அதைக் கைவிட இந்தியா இணங்காது.

பாகிஸ்தானுடனுள்ளசகல தகராறுகள் பற்றியும் சமாதான தீர்வு காண்பதே இந்தியாவின் நோக்கம். ''காஷ்மீர் சட்டபூர்வமாகவும், அரசியலமைப்பின் படியும் இறுதியாகவும் இந்தியாவுடன் இணைந்து விட்டது''. வயது வந்தோர் வாக்குரிமை அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அரசியல் நிர்வாகசபை இந்த இணைப்பை அங்கீகரித்திருக்கிறது. இது மக்களின் நிச்சயமான விருப்பத்தையே பிரதிபலிக்கிறது எனவே சர்வஜன வாக்கெடுப்பு பற்றி பேசும் எந்த வாதமும் இந்தியாவிலிருந்து அதைத்துண்டிப்பதன் நோக்கமேயாகும். எந்த அரசாங்கமும் தனது பிரதேசம் நாட்டிலிருந்து பிரிந்து செல்ல அனுமதிக்காது. எனவே சர்வஜன வாக்கெடுப்பு பற்றிய பிரச்னையே இல்லை'' என்றும் தினேஷ் சிங் குறிப்பிட்டார்.

''பக்: தூனிஸ்தானிலோ, பலுகிஸ்தானிலோ, கிழக்கு பாகிஸ்தானிலோ சுயநிர்ணய கொள்கையை பாகிஸ்தான் ஏற்கவில்லை. கடந்த 18 ஆண்டுகளாக பாகிஸ்தானிலும் கூட மக்கள்விருப்பத்தை அறிய எவ்வித முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை. தங்கள் சொந்தமக்கள் சுயநிர்ணயத்தை தீர்மானிக்க தகுதியில்லாதவர்கள் என நினைக்கும் பாகிஸ்தான் மற்றவர்கள் விஷயத்தில் சுயநிர்ணயத்தை வற்புறுத்துவதேன்'' என்றும் அவர் கேட்டார்.

''பாகிஸ்தானுக்கும், சீனவுக்குமிடையேயான உறவு சந்தேகத்துக்கிடமின்றி நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இந்தியாவுக்கு சீன விடுத்த இறுதி எச்சரிக்கை எங்கள் துருப்புக்களை வடஎல்லையிலேயே நிறுத்தி வைக்கச் செய்த முயற்சியாகும். பாகிஸ்தான்—சீன உறவை இதுவே நிரூபிக்கும். பாகிஸ்தான் யுத்த நிறுத்தத்தை ஏற்றதற்கும் சீன எச்சரிக்கை முடிவுற்றதற்கும் தொடர்பு இருக்கிறது. சீனவின் நோக்கங்கள் நாளுக்கு நாள் உலகெங்கும் நன்கு தெளிவாகிவருகிறது. இதர நாடுகளின் உள்நாட்டு விஷயத்தில் குறிப்பாக ஆசியாவில் தீவிரமாயும், திட்டமிட்டும். தலையீடு செய்தும் வருகிறார்கள்'' என்றும் அவர் கூறினார்.

எல்லா விஷயத்தையும் நன்கு தெரிந்திருந்த பிரிட்டன் பகிரங்கமாக பாகிஸ்தானுக்கு ஆதவளித்ததுஇந்தியாவுக்கு ஆழ்ந்த கவலை அளித்தது. பழைய காலணிக்கொள்கையின் புதியஉருவமாக இதைக்கூறலாம் என்றார் தினேஷ்சிங்.

அணுகுண்டு உற்பத்தி பற்றிக் கேட்டதற்கு, இந்தியா அணுகுண்டைத் தயாரிக்கும் திறமை பெற்றிருக்கிறதென்றும், ஆனல் சமாதானநோக்கத்திற்கே அணு சக்தியைப் பயன்படுத்துவதென்ற கொள்கையை இந்தியா தற்போது கடைப்பிடித்து வருகிறதென்றும் அவர் கூறினார்.

## கயரோக சங்க போட்டிகள்

சுழிபுரம், திங்கள்

இலங்கை கயரோக நிவாரண தேசிய சங்க வலிகாமம் மேற்குக் கிளை இவ்வாண்டுக்கான கயரோகப் போட்டிகளை நடாத்த ஏற்பாடுகள் செய்துள்ளது. பாடசாலைகள், வைத்திய சாலைகள் மற்றும் பொதுச் சங்கங்கள் ஆகியவற்றுக்கிடையே கயரோக அறிவு எழுத்துப் பரீட்சை, கட்டுரைப் போட்டி, சித்திரப் போட்டி, முத்திரை விற்பனைப் போட்டி, கயரோக கீதம் இயற்றல் போட்டி, நாடகப் போட்டி ஆகிய போட்டிகள் நடைபெறும்.

## விற்பனைக்கு

புதிய சிங்கர்—கை—மெசின் . . (புதிய ரகம்) . . விபரங்கட்கு.- N. நவம் அன் கம்பனி, இலக்கம் 28, மெயின் ஸ்றீற், யாழ்ப்பாணம். 1163

## எம். ஸி. ஸி.-பிரஸிடெண்ட் கிரிக்கெட் போட்டி

### வெற்றிதோல்வியின்றி முடிவு

## ஐயாறன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

சொன்னார். எல்லா நாட்களிலும் யாத்திரிகர் தூரத்திலிருந்தும் அதிகம் வருவதால், இவ்விஷயத்தில் தினசரி விசேஷ கவனம் செலுத்த வேண்டும். தெய்வீகத்துக்கு அடுத்தபடி பரிசுத்தம் என்று ஆங்கிலத்தில் சொல்லுவர்.

கிராமசபையிடம்போதிய பணவசதி இல்லாவிட்டால், இக்கோவிலையும் ஊரையும், ஒரு புனிதநகரமாகப் பிரகடனம் செய்து, தலைமை அரசாங்கம் இதற்கு விசேஷ மான்யம் அளித்து, இதன் அபிவிருத்திக்கு உதவ வண்டும். நீதிஅரசர் ஸ்ரீஸ்கந்தராசாதான் என்னை இங்கு பல வருடங்களுக்கு முன் முதல்முதலாக அழைத்துச் சென்றார். அவ்வித பிரமுகர்கள் இதில் விசேஷ ஊக்கம் எடுப்பின், உத்தர கதிர்காமமாகிய இந்த ஸ்தலத்துக்கு இலங்கையின் பல பகுதிகளிலிருந்து மட்டுமன்றி, யாத்திரிகர் இந்தியாவிலிருந்தும் வருவர். அவ்வளவு அருட்சக்தி அங்கு இருக்கின்றது.

இந்தியா எல்லாம் பலமுறை சுற்றியுள்ள ஓர் அன்பரைக் கேட்டதற்கு அவர் செல்வச்சந்நிதிக்கு இதுவரை போனதேயில்லை என்றார். வியப்பாக இருந்தது இயற்கை வனப்பும், அன்னதான முருகனின் அருள் பாலிப்புமுள்ள இந்த ஸ்தலத்துக்கு தயவு செய்து சென்று பாருங்கள். எவ்வளவு இன்பம்.

ஃ ஃ ஃ

''அன்னம் பாலிக்கும் தில்லைச்சிற்றம்பலம்'' என்று கூறுவர். சிதம்பரத்திலே இக்காலத்தில் அன்னம் காசுக்கு விற்பனை செய்யப்படுகிறது. ஆனல் செல்வச்சந்நிதியிலோ தினசரி அன்னதானம் நடக்கிறது.

சிறப்பாக ஆனந்தாச்சிரமத்தைத் தான் எல்லாரும் சொல்லுகிறார்கள். சாதாரணமாக அறுசுவை உண்டி என்பார்கள். ஆனல் அங்கு 15 சுவை உண்டி அளிக்கிறார் அன்பே வடிவான அன்னை. திருவண்ணாமலை ஸ்ரீ ரமண பகவானின் அருளாசிபெற்று சுவாமி மயில்வாகனம் இங்கு வந்து 25 வருடங்களுக்கு மேல் அன்னதானத் திருப்பணியைச் செய்துவருவது ஒரு பெரிய ருசியான கதை. சில சமயம் பணமில்லையே என்று நினைத்தால், எங்கிருந்தோ, பணம் வந்துவிடுமாம்! அன்னதானம் மட்டுமல்ல கோப்பிதானமும் அங்கு நடக்கிறதாம்!

முதலில் ஒரு சிறிய அறையுடன் ஆரம்பித்த இந்த ஆசிரமம், இப்போது மற்றவர்களுக்கு முன்மாதிரி காட்டுவதுபோல், பெரிதாக வளர்ந்து பல சேவைகளும் ங்கு நடப்பதைக் கண்டேன் எல்லாம் அந்த முருகனின் திருவருளல்லவா?

ஃ ஃ ஃ

பூத்தானும் பூவின் நிறத்தானுமாம் பூக்குளான் வாசமாய் மன்னிநின்ற, கோத்தானுங் கோல்வளையாள் கூறனுகுங்கொண்ட சமயத்தார் தேவனுகி, ஏத்தாதார்க்கென்று மிடரே துன்பம் ஈவானும் என் நெஞ்சத்துள்ளே நின்று, காத்தானுங் காலன் அடையாவண்ணங் கண்ணுங் கருகாவூர் எந்தை தானே.

— அப்பர்சுவாமிகள்.

பம்பலப்பிட்டி, செவ்.

எம். ஸி. ஸி. கோஷ்டிக்கும் இலங்கை பிரெஸிடெண்ட் கோஷ்டிக்குமிடையே கொழுப்பு ஓவல் மைதானத்தில் நேற்று நடைபெற்ற கிரிக்கெட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

ஸ்கோர்விபரம்:

எம். ஸி. ஸி. 6 விக்கெட்டுக்கு 198 ரன்கள்.

இலங்கை பிரஸிடென்ட் கோஷ்டி 6 விக்கெட்டுக்கு 155 ரன்கள்.

எம். ஸி. ஸி. கோஷ்யைச் சேர்ந்த பார்பர் 64 ரன்கள் எடுத்து அவுட் ஆகாமலிருந்தார். பார்பர் 3 சிக்ஸர்களும், 6 பவுண்டரிகளும் அடித்தார். ஸ்மித் 33ரன்கள் எடுத்தார். அலென் 23 ரன்கள் எடுத்து அவுட் ஆகவில்லை. பிரௌன், பார்பர் ஆகிய இருவரும் பந்து வீச்சில் திறமை காட்டினார்கள்.

இலங்கை கோஷ்டியைச் சேர்ந்த லயனல் பெர்னண்டோ 40 ரன்களும், மைக்கேல் திஸ்ஸேரா 26 ரன்களும், கொடிதுவக்கு 25 ரன்களும், ரீத் 20 ரன்களும் எடுத்தார்கள்.

புவாத் திறமையாகப் பந்துவீசினார்.

இன்று இலங்கை கிரிக்கெட் கோஷ்டிக்கும், எம். ஸி. ஸி. கோஷ்டிக்குமிடையே ஓவல் மைதானத்தில் விளையாட்டுப் போட்டி நடைபெறும்.

---

கோண்டாவில், செவ்.

வன பரிபாலன இலாகா ஊழியர்களுக்கும் சீமெந்து கூட்டுஸ்தாபன ஊழியர்களுக்குமிடையே சகிராக் கல்லூரியில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் இரு கோஷ்டியினரும் தலா 2—2 கோல்கள் போட்டதால் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

---

## குறைந்த சம்பளம்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பார்க்க தற்பொழுது கூடுதலாகச்சம்பளம் பெறும் சில அரசாங்க உத்தியோகத்தர்ளும் இப்பதவிக்கு மனுச் செய்திருந்தார்களாம். இப்படி எதற்குச் செய்தார்கள் என்பதுஅவர்களுக்குத்தான் புரியும்.

தீபாவளி திருநாளுக்காக **S. R. S. ஜவுளி மாளிகையில்**

எல்லாவிதமான பிடவைகளையும் மலிவான விலைகளில் விற்பனை செய்வதில் முதலிடம் பெற்றவர்கள்.

1929-ம் ஆண்டு தொடக்கம் அனேக ஆதரவாளர்களை கொண்ட வடஇலங்கையில் முதன்மையான ஸ்தாபனம்.

உங்களுக்குத் தேவையான எல்லாவித ஜவுளிகளையும் மலிவு விலைகளில் வாங்கலாம்.

~~~~ உடனே விஜயஞ் செய்யுங்கள்! ~~~~

**எஸ். ஆர். செல்லத்துரை**

216, கே. கே. எஸ். றேட், [போன்: 296] யாழ்ப்பாணம்.

(கதிரேசன் கோவிலுக்கும் மிட்டாய் கடைச்சந்திக்கும் இடையில் உள்ளது.)

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] மேலே வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 20-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
~~~~